**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**
முன்னிலை : **திரு T. சோழவேந்தன், B.A.,B.L.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி
2023–ம் ஆண்டு நவம்பர் மாதம் 30–ம் நாள் வியாழன்கிழமை
******

**இடைமனு எண்.6/2023 அசல் வழக்கு எண். 74/2016**

M. சுந்தராஜன் (எ) M.S. ராஜன் ..மனுதாரர்/வாதி

...எதிர்...

1. M. தேவதாஸ்
2. C. தேவிகா
3. R. கலைச்செல்வி
4. R. ரஞ்சித் ...1,2,3,4 எதிர்மனுதாரர்கள்/ 1,2,3,4–ம் பிரதிவாதிகள்

5. ரோகிணி ...5–ம் எதிர்மனுதாரர்/ 1–ம் எதிர்மனுதாரரின் வாரிசு

6. இந்திரா ...6–ம் எதிர்மனுதாரர்/ புதிதாக சேர்க்கப்பட வேண்டிய நபர்

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 30.11.2023 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு R. ஆத்மநாதன் அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு V. சாந்தி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரையைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரையில் என்னுடைய பரிசீலனையில் வைக்கப்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்

**உத்தரவு**

மனுதாரர்/வாதி வழக்குரையை திருத்தம் செய்து உத்தரவிடக்கோரி இம்மனு உ.வி.மு.ச.கட்டளை–6, விதி–17–ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்**

(i) மனுதாரர் அசல் வழக்கின் வாதி ஆவார். இந்த வழக்கு பிரதிவாதிகள் பேரில் மனுதாரர்/வாதியால் பாகப்பிரிவினை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு நிலுவையில் இருக்கும்பொழுது 1–ம் பிரதிவாதி தேவதாஸ் இறந்து விட்டார். எனவே 1–ம் பிரதிவாதிக்கு வாரிசுதாரராக 1–ம் பிரதிவாதியின் மகளான 5–ம் எதிர்மனுதாரர் ரோகிணியை இந்த வழக்கில் சேர்க்க வாரிசு மனு I.A.No.4/2022 தாக்கல் செய்து அது சமூகம் கோர்ட்டில் 07.12.2022 அன்று அனுமதிக்கப்பட்டுள்ளது. அதேபோல் 1–ம் பிரதிவாதியின் மனைவியான இந்திரா என்பவரை இந்த வழக்கில் சேர்க்க இடை மனு எண்.5/2023 தாக்கல் செய்து அம்மனு 28.07.2023 அன்று அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி சங்கதிகளை பொறுத்து மனுவில் விவரிக்கப்பட்டுள்ளப்படி பிராதை திருத்தம் செய்ய வேண்டும்.

(ii) மனுதாரர்/ வாத பெயர் பிராதில் M. சுந்தரராஜன் (எ) M.S. ராஜன் என்று தவறாக டைப் செய்யப்பட்டு விட்டது. எனது சரியான பெயர் M. சுந்தர்ராஜன் (எ) M.S. ராஜன் ஆகும். எனவே மனுதாரர்/வாதி பெயரை பொறுத்து பிராதை திருத்தம் செய்ய வேண்டும். அதேபோல் 4–ம் பிரதிவாதி பெயர் R. ரஞ்சித் என்று தவறுதலாக பிராதில் டைப் செய்யப்பட்டுவிட்டது. 4–ம் பிரதிவாதியின் சரியான பெயர் R. மனோரஞ்சித் ஆகும். எனவே அதனை பொறுத்தும் பிராதை திருத்தம் செய்ய வேண்டும்.

(iii) மனுதாரர்/வாதி இந்திய கப்பல் படையில் வேலை பார்த்ததால் வழக்கு சொத்தை பராமரிக்கவும், இதர காரியங்கள் செய்யவும் மனுதாரர்/வாதியால் முருகேசனுக்கு 07.12.1988–ல் ஒரு பதிவு பெற்ற ஜெனரல் பவர் பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார். வழக்கு சொத்தில் வீடு கட்டவேண்டி வழக்கு சொத்தை மனுதாரர்/வாதியும், 1–ம் பிரதிவாதி மற்றும் முருகேசனால் சீர்காழி வட்ட கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்தில் 29.07.1989–ல் அடமானம் வைத்து மேற்படி

சங்கத்திற்கு ஒரு பதிவு பெற்ற அடமான கடன் பத்திரம் எழுதிக் கொடுத்து கடன் பெற்று வழக்கு சொத்தில் வீடு கட்டப்பட்டது. மேற்படி வீட்டு வசதி சங்கத்தில் பெற்ற கடனை கொடுக்க வாதியால், தந்தை முருகேசனுக்கு கப்பல் படையில் இருந்து பணம் அனுப்பி அதை முருகேசன் மேற்படி சங்கத்திற்கு செலுத்தியுள்ளார். பணம் அனுப்பக்கோரி மனுதாரர்/வாதிக்கு முருகேசன் கடிதம் எழுதியுள்ளார். எனவே தாவா சொத்தில் உள்ள வீடானது மனுதாரர்/வாதியின் பணத்தைக் கொண்டு கட்டப்பட்டுள்ளதால் தாவா சொத்தில் உள்ள வீடு வாதிக்கு உரிமையானது ஆகும்.

(iv) எனவே தாவா சொத்தில் அமைந்துள்ள வீட்டின் அடிமனையையும், தாவா சொத்தில் உள்ள வீட்டையும் வாதிக்கு பாகமாக சட்டப்படி கிடைக்கக்சுடியது ஆகும். எனவே மேற்படி சங்கதிகளை பொறுத்தும் பிராதை திருத்தம் செய்ய வேண்டியுள்ளது. எனவே மனுவில் விவரிக்கப்பட்டுள்ளப்படி பிராதை திருத்தம் செய்ய உத்தரவாக வேண்டும் . இல்லாவிடில் மனுதாரர்/வாதிக்கு கஷ்டமும் நஷ்டமும் ஏற்படும். மனுவில் விவரிக்கப்பட்டுள்ளப்படி பிராதை திருத்தம் செய்ய உத்தரவாக வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## 2. <u>எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்த ஆட்சேபனை குறிப்பாணையின் சுருக்கம்.</u>

இந்த மனுவானது மாண்பமை நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட இடைமனுக்களான I.A.No.4/2023 மற்றும் I.A.No.5/2023 –ன் அடிப்படையிலேயே தாக்கல் செய்யப்படவேண்டும். ஆனால் இந்த இடைமனுவில் மேற்படி முந்தைய இரண்டு இடைமனுக்களில் இல்லாத திருத்த விபரம் மற்றும் அனுமதிக்கப்படாத திருத்தவிபரத்தை இந்த இடைமனு மூலம் புகுத்த இயலாது. அதாவது இந்த இடைமனுவில் பாரா–8(அ) என்பது மேற்படி இரண்டு இடைமனுக்களிலும் இல்லாத திருத்த விபரம் ஆகும். மேலும் இந்த

இடைமனுவின் திருத்த விபரத்தில் உள்ள பாரா–8 (அ) என்பது தாவா பிராதில் புதிதாக ஒரு சங்கதியை இந்த திருத்த மனு மூலம் புகுத்த நினைப்பது ஏற்கக்கூடியதல்ல. இந்த காரணத்திற்காக இந்த இடைமனு தள்ளுபடிக்கு அருகதையாக உள்ளது.

<u>இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை</u>

3. மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கதக்கதா?

4. இம்மனுவில் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சி விசாரிக்கப்படவில்லை, மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.13 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிர்மனுதாரர் தரப்பில் எவ்வித சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

5. <u>தீர்வு:</u>

(i) இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. மனுதாரர்/வாதி தரப்பில் பாகபிரிவினை கோரி அசல் வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கின் 1–ம் பிரதிவாதி இறந்துவிட்டதால் அவரது வாரிசாக 5–ம் எதிர்மனுதாரர் இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்க அனுமதி கோரிய இடைமனு எண் 4/2022 கடந்த 07.12.2022 ல் அனுமதிக்கப்பட்டுள்ளது. அதேபோன்று 6–ம் எதிர்மனுதாரர் இவ்வழக்கின் அவசியமான தரப்பினர் என்பதால் தரப்பினராக சேர்க்க அனுமதி கோரிய இடைமனு எண் 5/2023 கடந்த 28.07.2023 ல் அனுமதிக்கப்பட்டுள்ளது.

(ii) மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கு சொத்தில் உள்ள வீடானது மனுதார்/வாதியால் வெளிநாட்டிலிருந்து அனுப்பப்பட்ட பணத்தைக் கொண்டு கட்டியதாகவும், மேற்படி வீட்டை வாதியின் பாகத்திற்கு ஒதுக்கக் கோரி அசல் வழக்கில் பிராதை திருத்த அனுமதி கோரப்பட்டுள்ளது. எதிர்மனுதார்/பிரதிவாதி தரப்பில் கடந்த 06.08.2008 ல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு வழக்கு விசாரணை தொடங்கப்பட்டுள்ள நிலையில் மனுதார் /வாதியின் மனுவானது காலம் கடந்தது என்றும், சட்டப்படி நிலைக்கதக்கதல்ல என்றும் ஆட்சேபனை

செய்யப்பட்டது.

(iii) அசல் வழக்கானது வாதி தரப்பில் முதல் விசாரணை வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணைக்காக வழக்கு நிலுவையில் இருந்த சமயத்தில் இடைமனு எண் 4/2022 மற்றும் இடைமனு எண் 5/2023 தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும் மனுதார்/வாதி தரப்பில் பாகப்பரிவினைக்காக வழக்கு தாக்கல் செய்துள்ள நிலையில் மனுதாரர்/வாதியால் கோரியுள்ள வழக்குரை திருத்தமானது அனுமதிக்கும் பட்சத்தில் வழக்கின் தன்மையும் வழக்கு மூலமும் மாறுபடுவதில்லை. இம்மனுவை அனுமதித்தால் எதிர்மனுதாரருக்கு எவ்விதமான பாதிப்பும் ஏற்பட போவதில்லை. மேலும் இது விசாரணை நீதிமன்றமாக இருப்பதால் பின்னிட்டு ஒரே பொருண்மையின் அடிப்படையில் ஏற்படும் (Multiplicity proceedings) வழக்கு நடிவடிக்கைகளை தவிர்க்கும் பொருட்டு தரப்பினர்களுக்கு உரிய வாய்ப்பு கொடுத்து அதன் பின் வழக்கில் தீர்வு காண்பதே நீதியின் நலனுக்கு உகந்தது என்று கருதி மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவது என்றும், மனுவின் தன்மை கருதி தரப்பினர்கள் அவரவர் செலவுத்தொகையை அவரவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று முடிவு செய்து அவ்வாறு இம்மனுவின் பிரச்சணைக்கு தீர்வு காண்கிறது.

முடிவில், இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2023–ம் ஆண்டு நவம்பர் மாதம் 30–ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

(ஓம்/– T.சோழவேந்தன்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

**<u>பின் இணைப்பு</u>**

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள்</u> – இல்லை –

**<u>மனுதாரர் தரப்பி சான்றாவணங்கள்</u>**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 20.12.1985 | முருசேகன் கௌசல்யாவிற்கு எழுதிக்கொடுத்த கிரய சாசனத்தின் சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.2 | 07.12.198 | முருகேசனக்கு மனுதாரருக்கு எழுதிக்கொடுத்த பவர் பட்டாவின் சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.3 | 12.03.1990 | வீட்டுவசதி சங்கதிற்கு மனுதாரருக்கு பணம் செலுத்திய ரசீதின் அசல் |
| ம.சா.ஆ.4 | 03.05.1990 | வீட்டுவசதி சங்கத்திற்கு மனுதாரருக்கு பணம் செலுத்திய ரசீன் அசல் |
| ம.சா.ஆ.5 | 19.11.1990 | வீட்டுவசதி சங்கத்திற்கு மனுதாரருக்கு பணம் செலுத்திய ரசீன் அசல் |
| ம.சா.ஆ.6 | 02.02.1991 | வீட்டுவசதி சங்கத்திற்கு மனுதாரருக்கு பணம் செலுத்திய ரசீன் அசல் |
| ம.சா.ஆ.7 | 02.05.1992 | வீட்டுவசதி சங்கத்திற்கு மனுதாரருக்கு பணம் செலுத்திய ரசீன் அசல் |
| ம.சா.ஆ.8 | 02.06.1992 | வீட்டுவசதி சங்கத்திற்கு மனுதாரருக்கு பணம் செலுத்திய ரசீன் அசல் |
| ம.சா.ஆ.9 | 31.03.1994 | வீட்டுவசதி சங்கத்திற்கு மனுதாரருக்கு பணம் செலுத்திய ரசீன் அசல் |
| ம.சா.ஆ.10 | 06.05.1998 | வீட்டுவசதி சங்கத்திற்கு மனுதாரருக்கு பணம் செலுத்திய ரசீன் அசல் |
| ம.சா.ஆ.11 | 12.11.199 | வீட்டுவசதி சங்கத்திற்கு மனுதாரருக்கு பணம் செலுத்திய ரசீன் அசல் |
| ம.சா.ஆ.12 | 05.10.1994 | வாதிக்கு முருகேசன் எழுதிக்கொடுத்த கை கடிதம் |
| ம.சா.ஆ.13 | 23.06.1997 | வாதிக்கு முருகேசன் கை லெட்டர் |

<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u> – இல்லை –
<u>எதிர்மனுதார்கள் தரப்பு சாட்சிகள்</u> – இல்லை –
<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்</u> – இல்லை –

(ஓம்/– T.சோழவேந்தன்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

இடைமனு எண்.6/2023–ல்
அசல் வழக்கு எண்.74/2016
நாள்.30.11.2023.